## தலைப்பு 298 - அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 298 - அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.6.3 ஆம் பந்தியில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் முற்பணங்களின் பெறுவனவு ரூபா 7,225,245 தொகையாக இருந்த அதேநேரம் திறைசேரி அட்டவணை SA 52 இன் பிரகாரம் முன்பண பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 7,674,867 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 449,622 தொகை குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 7,225,245 தொகையாக இருந்த போதிலும் திறைசேரி அட்டவணை SA 52 இன் பிரகாரம் இந்த முற்பணத்தின் பெறுமதி ரூபா 7,674,867 ஆக இருந்ததால் ரூபா 449,622 வேறுபாடொன்றை சுட்டிக்காட்டுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | திணைக்கள பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய வருமானத் தலைப்புக்களின் கீழ் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 8,118,607 தொகையாக உள்ள போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,174,028 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளதால் ரூபா 6,944,579 வேறுபாட்டை விளைவித்துள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை சரியாக பிரதிபலிக்கும் ஆவணமாக இருப்பதால், கணக்குகளை தயாரிக்கும் போது, செலவினப் பேரேட்டில் உள்ள செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ள பெறுமதிகளிலிருந்து குறுக்கு | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதிவுகளைச் சீராக்கம் செய்வதன் மூலம் உண்மையான காசுப்பாய்ச்சல் பெறுமதிகளை பயன்படுத்தி இது தயாரிக்கப்படுகிறது. | |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள பரீட்சைமீதியின் பிரகாரம் ஆளணியினர் வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 167,809,639 கூட்டுமொத்தமாகும், இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 155,838,014 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளதால் ரூபா 11,971,625 வேறுபாட்டை விளைவித்துள்ளது. | ஆளணியினர் வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களாக காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதிகள் உண்மையான காசு புள்ளிவிபரங்களிலிருந்து மாத்திரமே பெறப்பட்டன. | காசுப்பாய்ச்சல் கூற்று வழிகாட்டலின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில், பிரதான பேரேட்டு செலவினங்களின் கீழ் முற்பண கொடுப்பனவுகள் ரூபா 10,933,565 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ள அதேநேரம் திறைசேரி அட்டவணை SA 52 இல் குறிப்பிடப்பட்டுள்ள முற்பண கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 11,383,186 ஆக இருந்ததால் ரூபா 449,621 குறைத்துக் காட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது. | பிழை காரணமாக மார்ச் மாதத்தில் 298012 இற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்த ரூபா 171,048 தொகையானது 298011 இற்கு வரவு வைக்கப்பட்டதுடன் செப்தெம்பர் மாதத்தில் கணக்கு 298012 இற்கு கொடுப்பனவு ஒன்றாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய ரூபா 278,138 தவறுதலாக 298012 இற்கு பெறுவனவொன்றாக பதிவு செய்யப்பட்டது. இந்த சிக்கல் சீர்செய்யப்பட்டுள்ளது. | வைப்பு கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | திணைக்கள பரீட்சைமீதியின் பிரகாரம் முற்பண அறவீடு ரூபா 8,336,761 தொகையாக இருந்த அதே நேரம் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 774,096 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளதால் ரூபா 7,562,665 வேறுபாட்டை விளைவித்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை உண்மையாகக் காட்டும் ஆவணமாக இருப்பதால், செலவினப் பேரேட்டில் உள்ள செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ள பெறுமதிகளிலிருந்து குறுக்கு பதிவுகளைச் சீராக்கம் செய்வதன் மூலம் உண்மையான | காசுப்பாய்ச்சல் கூற்று வழிகாட்டலின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காசுப்பாய்ச்சல் பெறுமதிகளை பயன்படுத்தி இது தயாரிக்கப்படுகிறது. | |
| (iii) | திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சைமீதியின் பிரகாரம் முற்பண கொடுப்பனவு பெறுமதி ரூபா 11,661,324 ஆக இருந்த அதே நேரம் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 9,323,631 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதால் ரூபா 2,337,693 வேறுபாட்டை விளைவித்துள்ளது. | ரூபா 9,323,631 தொகையானது 298011 இற்கான உண்மையான காசுப்பாய்ச்சலை பிரதிபலிக்கிறது, இந்த பெறுமதி மாத்திரமே காசுப்பாயச்சல் கூற்றில் சீர்செய்யப்பட்டது. | -மேற்படி- |

**(ஈ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களமானது செலவினப் பேரேடு மற்றும் வைப்புப் பதிவேடு என்பவற்றை நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணியிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட வேண்டும். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவப் பலவீனம்**

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பண பீ கணக்கில் உள்ள அதிகாரிகளின் மொத்த நிலுவை மீதி ரூபா 576,605 தொகையாகும். மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இறந்த அதிகாரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 147,429, பணிநீக்கம் செய்யப்பட்ட மூன்று அதிகாரிகளிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 217,570 மற்றும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி விலகியிருந்த ஒரு அதிகாரியிடமிருந்து நிலுவையாக இருந்த ரூபா 211,606 ஆகிய தொகைகளை இந்த மீதி உள்ளடக்கியுள்ளது, இறந்த அதிகாரியின் கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv | இறந்த அதிகாரியிடமிருந்து பெறவேண்டிய மீதி தொடர்பான விபரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மரண பணிக்கொடை செலுத்தும் போது மீதியை தீர்ப்பனவு செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், பணிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நி.பி. 113 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | தாபன விதிக்கோவை மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் அத்தியாயத்தின் 4:6 ஆம் பிரிவின் பிரகாரம் அல்லது பதவி விலகிய மற்றும் இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகளின் மீதிகள் தொடர்பாக அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இற்கு இணங்க வழிகாட்டல் இல. 01 இன் (i) ஆம் பிரிவிலுள்ள (ஆ) பந்தியின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3. நல்லாளுகை**

**3.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களம் அதனது பணிகளைச் செய்வதற்கு பொருத்தமான உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2021 செப்தெம்பர் 06 முதல் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் நியமனம் தொடர்பில் பொது நிர்வாக செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் இல்லாத நிலையிலும் திணைக்கள உள்ளக கணக்காய்வு பிரிவின் செயற்பாடுகள் திருப்திகரமாக இடம்பெற்று வருகின்றது. | கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறுள்ளன.

| ஊழியர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 19 | 09 | 10 |
| மூன்றாம் நிலை | 30 | 02 | 28 |
| இரண்டாம் நிலை | 216 | 190 | 26 |
| ஆரம்ப நிலை | 103 | 81 | 22 |
| | **368** | **282** | **86** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பதவியணியினர் 19 பதவிகளைக் கொண்டிருந்தனர். மொத்தத்தில் 53% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்தப் பதவிகளில் 10 பதவிகள் 2011 முதல் வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை விஞ்ஞான சேவையில் பிரதிப் பணிப்பாளர்கள்/ உதவிப் பணிப்பாளர்களுக்கான 8 பதவிகளும், இலங்கை நிர்வாக சேவையில் உதவிப் பணிப்பாளரிற்கான (நிர்வாகம்) 1 பதவியும், இலங்கை கணக்காளர்கள் சேவையில் கணக்காளரிற்கான (உள்ளக கணக்காய்வு) 1 பதவியும் இதில் உள்ளடங்குகின்றன. | பொது நிர்வாக அமைச்சின் தாமதம் காரணமாக இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருந்ததுடன், இது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட 30 மூன்றாம் நிலை பதவிகளில், இலங்கை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் (உயர் தரம்) 1 நிர்வாக உத்தியோகத்தர், 4 உதவி அளவுக்கூறுகள் நியம உத்தியோகத்தர்கள் (திணைக்கள பதவிகள்) மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (உயர் தரம்) 23 பதவிகள் உட்பட 28 பதவிகள் 93% ஐ பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | இவற்றில் 25 பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையின் இறுதி வரைவு 2024.03.22 இல் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது, மீதமுள்ள 4 பதவிநிலைகள் குறித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலைகளில் இருபத்தி மூன்று (23) சதவீதம் வெற்றிடமாக இருந்தது, மேலும் இந்த வெற்றிடங்கள் அனைத்தும் திணைக்களம் சார்ந்த பதவிகளாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | 36 அளவையியல் பரிசோதகர் (MN-04) பதவிகளை தரமுயர்த்துதல், அளவையியல் பரிசோதகர் பதவிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 20 வெற்றிடங்களை நிரப்புதல், அளவையியல் பரிசோதகர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பட்டதாரிகளை பணிக்கமர்த்துதல் ஆகிய முன்மொழிவுகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |